மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வெளி நபர்கள் உள்ளே வந்து தண்ணீரை விற்பதாகத் தெரிவித்திருக்கின்றார். அது ஆய்வு செய்யப்பட்டு பரிசீலனை செய்யப்படும். அதேபோன்று, உள்ளே குப்பைகள் எல்லாம் கொட்டப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கின்றார். அதுபோன்ற நிகழ்வு இல்லை. அங்கு அவ்வப்போது சுத்தம் செய்யும் பணி தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது என்ற செய்தியினை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 61, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. தமிழரசன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

61—

துணை மின் நிலையம்

***20541—திரு. கா. தமிழரசன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை கிழக்குத் தொகுதி, குலமங்கலத்தில் 110/11 கி.வோ. திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மதுரை கிழக்குத் தொகுதி, குலமங்கலம் பகுதிக்கு தற்போது திருப்பாலை 110/33/11 கி.வோ. 2 X 16 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றியுடன் இயங்கிவரும் துணை மின் நிலையத்திலிருந்து சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இம்மின்மாற்றிகளின் உச்ச மின் பளு 20.45 எம்.வி.ஏ. மட்டுமே ஆகும். தற்போதுள்ள மின்மாற்றிகளின் மின் பளு போதுமானதாக உள்ளது. இன்னும் சொல்லப்போனால் தேவைக்கதிகமாகவே உள்ளது. எனவே, மதுரை

2013 அக்டோபர் 30]

கிழக்குத் தொகுதி, குலமங்கலம் பகுதியில் புதியதாக 110/11 கி.வோ. திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. தமிழரசன் அவர்கள்.

திரு. கா. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கிழக்குத் தொகுதி, திருப்பாலை அய்யர்பங்களாவில் அமைந்துள்ள துணை மின் நிலையம் குலமங்கலம் பகுதியின் கடைசியில் இருக்கின்றது. அதில் 21 ஊராட்சிகள் இருக்கின்றன. அது 20 வருடங்களுக்கு முன்பு அமைக்கப்பட்டது. இப்பொழுது மதுரை மாவட்டத்தில் தத்தனேரி, திருப்பாலை, கண்ணனேந்தல் ஆகிய ஊராட்சிகள்தான் இருக்கின்றன. அதில், அனைத்து அரசு ஊழியர்களும் இருக்கின்ற காரணத்தால், மாநகராட்சிப் பகுதியில் திருப்பாலை சேர்ந்துவிட்டது. நீங்கள் 110/11 கி.வோ. துணை மின் நிலையத்தை அமைத்துக் கொடுத்தால் மிக நன்றாக இருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலனை செய்யும்படி கேட்டுக்கொள்கின்றேன். திருப்பாலையில் 21 பெரிய ஊராட்சிகள் இருப்பதால், இந்தத் துணை மின் நிலையத்தை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

இப்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை பொறுத்தவரை நல்லாட்சி நடத்திக்கொண்டிருக்கின்றார்கள். நேற்று பேசும்போதுகூட அருமை அண்ணன் டாக்டர் விஜயபாஸ்கர் அவர்கள், 'மூன்று வெடி வாங்கினேன். மூன்றும் வெடிக்கவில்லை' என்று சொன்னார். தற்போது திட்டக்குடி எம்.எல்.ஏ. போட்ட வெடி, இப்போதாவது டெல்லிக்குக் கேட்டிருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். திட்டக்குடி எம்.எல்.ஏ. போட்ட சரவெடி என்பது இப்போதாவது ஏற்காட்டிலிருந்து டெல்லிக்குக் கேட்டிருக்கும் என்று நினைத்துக்கொண்டு, நேற்று வெடிக்காத வெடி இப்போதாவது

சந்தோஷமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டு அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல மதுரை கிழக்குத் தொகுதிக்குட்பட்ட குலமங்கலம் பகுதிக்கு, திருப்பாலை 110/11 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. அது சற்று தொலைவில் இருக்கிறது என்று குறிப்பிட்டார். அதற்காகத்தான் அருகில் இருக்கின்ற ஊமச்சிகுளத்திற்குச் செல்கின்ற அந்தத் தனி மின்னூட்டி (Feeder) மூலமாக குலமங்கலம் சுற்றுப் பகுதிகளுக்கெல்லாம் மின்சாரம் வழங்கப்படுகிறது. குலமங்கலம் பகுதியில் உள்ள டிரான்ஸ்பார்மரின் மொத்த மின் பளு 350 கே.வி.ஏ. ஆகும். 250 கே.வி.ஏ. திறன் கொண்ட ஒரு மின் மாற்றியும், 100 கே.வி.ஏ. திறன் கொண்ட ஒரு கூடுதலான மின் மாற்றியும் குலமங்கலம் பகுதிக்கென்று தனியாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, ஊமச்சிகுளம் மின்னூட்டி வழியாக, குலமங்கலம் பகுதியிலே ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற 350 கே.வி.ஏ. திறன்கொண்ட மின் மாற்றிகளின் வழியாக போதுமான அளவிற்கு மின்சாரம் வழங்கப்படுகிறது. அந்தக் குலமங்கலம் பகுதிக்கு மட்டுமே மின் பளு 350 கே.வி.ஏ.தான். ஆகவே, அங்கே இருக்கின்ற மின் பளுவுக்கு போதுமான அளவுக்கு, மின்சாரப் பற்றாக்குறை இல்லாத அளவிற்கு, லோ–வோல்டேஜ் இல்லாத அளவிற்கு மின்சாரம் வழங்கப்படுகிறது. ஆனாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, அது வளர்ந்துவரும் மாநகராட்சிப் பகுதியில் இணைக்கப்பட்டுள்ளதால், இன்னும் வளர்ந்து வரும் பகுதி என்பதால், இனிமேல் வருகின்ற மின் பளு அதிகரிக்கும் என்பதை ஏற்றுக்கொண்டு, நிச்சயமாக மின் தேவை அதிகரித்தால், தேவைக்கு ஏற்ப அந்தப் பகுதியிலே கூடுதலாக ஒரு துணை மின் நிலையம் அமைப்பது குறித்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய ஆய்வுகளை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.